
## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தாய்மொழி - தரம் 02 / மூன்றாந் தவணை – இரண்டாம் வாரம் ( $L_7$ $S_7$ $R_7$ $W_7$ )**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

01). சொற்களஞ்சிய விருத்திக்காக கீழே தரப்பட்டுள்ள கதைப் படத்தினைப் பார்த்து கதையை கட்டியெழுப்ப ஆர்வ மூட்டுங்கள் ( பெற்றோர் )

**எறும்பின் சாமர்த்தியம்.**



- பிள்ளை இடர்படும் இடத்தில் கதையைக் கூறுவதற்கு உதவுங்கள்.
  ( கதைப்படத்தை நன்கு அவதானிக்கச் செய்க. )

02). பிள்ளைகள் சுயமாக தமது கற்பனை வளத்திற்கேற்பக் கதையைக் கூறுகிறார்களா என அவதானியுங்கள். முயற்சி செய்யத் தூண்டுங்கள்.

03). பிள்ளை கதையைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். பின்னர் கீழுள்ளவற்றைவாசிக்க வழிகாட்டுங்கள்.

i). எறும்பு ஆற்றங்கரைக்குச் சென்றது.
ii). அது ஆற்றைக் கடக்க முயன்றது.
iii). ஆற்றில் வெள்ளம் பாய்ந்து ஓடியது.
iv). எப்படிக் கடப்பது என்று சிந்தித்தது.
v). அதற்கு உதவிசெய்வதற்கு அங்கு யாரும் இல்லை.
vi). மரத்தில் ஏறி இலை ஒன்றைப் பறித்தது.
vii). இலையைத் தெப்பமாகப் பயன்படுத்த நினைத்தது.
viii). ........................................................................................................................
ix). ........................................................................................................................
x). ........................................................................................................................

- இறுதி முடிவை கூறுகின்றார்களா என அவதானித்து, அவர்கள் கூறும் முடிவை எழுதிக் காட்டுங்கள்.

04). படக் கதையைக் கொண்டு முடியுமான வினாக்களை வினவுங்கள்.

- கதைப்படத்தை தமது அப்பியாசக் கொப்பியில் ஒட்டுமாறு கூறி கதையை எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் வழிகாட்டுங்கள்.